*கவனிக்க.-2018.01.26 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2057 - 2018 පෙබරවාරි මස 02 වැනි සිකුරාදා - 2018.02.02

*2057 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 128 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | 129 |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | 130 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | - |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 131 |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படுந் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகுந் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகுந் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2018, பெப்புருவரி மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, பெப்புருவரி மாதம் 09 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


*127-B 81248-403 (2018/02)*

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

*2018 இன் இல. 58*

MOD/DEF/03/02/8/7.

**இலங்கைக் கடற்படை - நிரந்தரக் கடற்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால்
அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வுபடுத்துதல்

2017, ஓகத்து மாதம் 02 ஆந் திகதியிலிருந்து வைத்தியர் லெப்டினன்ட் கொமாண்டர் தரத்துக்கு

வைத்தியர் லெப்டினன்ட் கிராம ஜெஸ்ட நம்பிராலலாகே சஞ்ஜய சுநெத் விஜேவர்தன, என்ஆர்எம் 2783, இகப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கபில வைத்தியரத்ன (சனாதிபதி சட்டத்தரணி),
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2017, திசெம்பர் 08.

02-47

---

*2018 இன் இல. 59*

MOD/DEF/03/02/RET/313.

**இலங்கைக் கடற்படை - நிரந்தரக் கடற்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால்
அங்கீகரிக்கப்பட்ட ஓய்வு பெறுதல்

பின்வரும் பெயருடைய அதிகாரி 2017, திசெம்பர் மாதம் 22 ஆந் திகதியிலிருநது இலங்கைக் கடற்படை நிரந்தரப் பிரிவில் ஓய்வு பெறுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

லெப்டினன்ட் கொமாண்டர் (நாசெ) விக்ரமசிங்ஹ சேனாநாயக சந்தரசிறி, என்ஆர்பீ 1096, இகப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கபில வைத்தியரத்ன (சனாதிபதி சட்டத்தரணி),
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2017, திசெம்பர் 08.

02-48

---

*2018 இன் இல. 60*

MOD/DEF/03/02/RET/315.

**இலங்கைக் கடற்படை - நிரந்தரக் கடற்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால்
அங்கீகரிக்கப்பட்ட ஓய்வு பெறுதல் மற்றும் நிரந்தரக்
கடற்படை உப சேவைக்கு மாற்றுதல்

கீழ்க்காணப்படும் பெயருடைய அதிகாரி 2018, மாச்சு 18 ஆந் திகதியிலிருந்து இலங்கைக் கடற்படை நிரந்தர பிரிவில் ஓய்வு பெற்று மீண்டும் அந்த நாளில் இருந்து நிரந்தரக் கடற் படை உப சேவைக்கு மாற்றுதல் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது:-

லெப்டினன்ட் கொமாண்டர் (நாசெ) வடுதந்திரிகே றொமேஸ் ரவிந்தர பெரேரா, என்ஆர்பீ 1090, இகப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கபில வைத்தியரத்ன (சனாதிபதி சட்டத்தரணி),
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2017, டிசெம்பர் 22.

02-45

---

*2018 இன் இல. 61*

MOD/DEF/03/02/8/7.

**இலங்கைக் கடற்படை - நிரந்தரக் கடற்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால்
அங்கீகரிக்கப்பட்ட பதவி உயர்வுபடுத்துதல்

2017, செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் தரத்துக்கு

லெப்டினன்ட் இலுப்புலி அச்சில்லாகே வருனக பண்டார ஏகல்ல, என்ஆர்எக்ஸ் 2482, இகப

*2017, செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் (ச) தரத்துக்கு*

லெப்டினன்ட் (ச) அநுராத பண்டார விஜயரத்ன ஜயசுந்தர, என்ஆர்எஸ் 2666, இகப

*2017, ஒற்றோபர் மாதம் 9 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் (ச) தரத்துக்கு*

லெப்டினன்ட் (ச) இந்திகா சஞ்ஜீவனீ வீரமுனி, என்ஆர்எஸ் 2698, இகப

*2017, ஒற்றோபர் மாதம் 24 ஆந் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் (விஆ) தரத்துக்கு*

லெப்டினன்ட் (விஆ) ஜயசூரிய ஆரச்சிலாகே தாரக கிஹான் ஜயசூரிய, என்ஆர்ஆர் 2497, இகப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கபில வைத்தியரத்ன (சனாதிபதி சட்டத்தரணி),
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2017, டிசெம்பர் 05.

02-46

2018 இன் இல. 62

MOD/DEF/03/02/8/ 7

**இலங்கைக் கடற்படை - நிரந்தரக் கடற்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால்
அங்கீகரிக்கப்பட்ட பதவியுயர்வுபடுத்துதல்

*2017, ஒற்றோபர் 16 ஆம் திகதியிலிருந்து தற்காலிக லெப்டினன்ட் கொமாண்டர் தரத்துக்கு அதியுத்தமராம் சனாதிபதி அவர்களினால் அங்கீகரிக்கப்பட் டுள்ளது:-*

லெப்டினன்ட் நன்எதிரி தேவயலாகே சமிந்த ருவன் கருணாரத்ன, என்ஆர்எக்ஸ் 2684, இகப

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கபில வைத்தியரத்ன (சனாதிபதி சட்டத்தரணி),
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

கொழும்பு,
2017, டிசெம்பர் 05.

02-44

## அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும்

2018 இன் இல. 63

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது**

இலங்கை நிருவாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திருமதி பி. எஸ். எம். சார்ள்ஸ் அவர்கள். 2017, ஒற்றோபர் மாதம் 02 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை சுங்கப் பணிப்பாளர் அதிபதியாக.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

சுமித் அபேசிங்க,
அமைச்சரவைச் செயலாளர்.

2-103/3

2018 இன் இல. 64

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது**

இலங்கை நிருவாக சேவையின் I ஆம் தரத்தைச் சேர்ந்த கலாநிதி திரு. ஆர். பி. ஏ. விமலவீர அவர்கள். 2017, ஒற்றோபர் மாதம் 10 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மேலும் ஒரு (01) வருட காலத்திற்கு தொழில் ஆணையாளர் அதிபதி பதவியில் பதில் கடமையாற்றுவதற்கு.

அமைச்சரவையின் கட்டளைப்படி,

சுமித் அபேசிங்க,
அமைச்சரவைச் செயலாளர்.

2-103/4

*2018 இன் இல. 65*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது**

*இலங்கை நிருவாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திரு. சிந்தக்க எஸ். லொக்குஹெட்டி அவர்கள். 2017, ஒற்றோபர் மாதம் 26 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சின் செயலாளராக.*

*அமைச்சரவையின் கட்டளைப்படி,*

*சுமித் அபேசிங்க,*
*அமைச்சரவைச் செயலாளர்.*

*2-103/1*

*2018 இன் இல. 66*

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(2) ஆம் உறுப்புரையின் நியதிகளின் பிரகாரம் அமைச்சரவையினால் பின்வரும் நியமனம் செய்யப்பட்டுள்ளது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது**

*இலங்கை நிருவாக சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த திரு. என். கே. ஜீ. கே. நெம்மவத்த அவர்கள், 2017 நவெம்பர் மாதம் 23 ஆம் திகதியிலிருந்து செயல்வலுவுக்கு வரத்தக்கதாக மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் அரசாங்க தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் அதிபதியாக.*

*அமைச்சரவையின் கட்டளைப்படி,*

*சுமித் அபேசிங்க,*
*அமைச்சரவைச் செயலாளர்.*

*2-103/2*

## மற்றைய நியமனங்களும் பிறவும்

*2018 இன் இல. 67*

**காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு**

*நில அளவைச் சபைக்கு உறுப்பினர்களை நியமித்தல்*

*2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைச் சட்டத்தின் 27 (ஆ) ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு கீழே பெயர் குறிப்பிடப்பட்டவர்களை நில அளவைச் சபையின் உறுப்பினர்களாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கால அளவிற்கு நியமனம் செய்கின்றேன்.*

| | | |
|---|---|---|
| (i) | *நளினகீர்த்தி அபேவீர குணர்தன* | *- 2018.01.01. இலிருந்து 2020.12.31 வரை* |
| (ii) | *கொடிதுவக்கு ஆராச்சிகே கபில இலங்காபிறேம எதிரிசிங்க* | *-2018.01.01. இலிருந்து -2020.12.31 வரை* |
| (iii) | *ஜெயசேகர முதலிகே விஜேவர்தன* | *-2018.01.01. இலிருந்து 2020.12.31 வரை* |
| (iv) | *நளின் குமார விக்கிரமாராச்சி* | *-2018.01.01. இலிருந்து 2020.12.31 வரை* |

*கயந்த கருணாதிலக்க,*
*காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.*

*கொழும்பு,*
*2017, திசெம்பர் 29.*

*2- 53*

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

## பிரதேச அபிவிருத்தி வங்கி

*2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் 40 ஆம் பிரிவினால் வலுவாக்கப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கடன்களை அறவிடுதல் விசேட ஏற்பாடுகளின் கீழ் பிரதேச அபிவிருத்தி வங்கியின்பணிப்பாளர் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

வெத்தசிங்ஹ ஆராச்சிகே சொலொமன் சஞ்ஜீ பெர்ணாண்டோ எனும் வெத்தசிங்ஹ ஆராச்சிகே சொலமன் சஞ்ஜீ பெர்ணாண்டோ

சேமிப்பு கணக்கு இலக்கம் : 725010100306/725010100307
கடன் கணக்கு இலக்கம் : 725059600966/725059600965/ 725055900017

2017.11.28 ஆந் திகதி நடைபெற்ற பிரதேச அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபையின் 2017/13 ஆம் இலக்க கூட்டத்தில் கீழ்கண்டவாறு விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"பிரதேச அபிவிருத்தி வங்கியின் சார்பில் "விமுக்தி" கட்டுநேரிய எனும் முகவரியைச் சேர்ந்த சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான டபிள்யூ. ஏ. டீ. ஜீ. சரத் ஸ்டேன்லி அவர்களினால் சாட்டுதல் செய்யப்பட்ட 2015.09.18 ஆந் திகதியிடப்பட்ட இலக்கம் 7986 உடைய ஈட்டுமுறியின்படி வங்கிக்கு வருமதியாக உள்ள பணம் செலுத்துதல் கடன்படுநர் எனக்குறிப்பிடப்படும் தொடுவாவ தபாற்பிரிவில் தல்வில வெல்ல "சொலமன் ஹோட்டல்" எனும் முகவரியில் வசிக்கும் வெத்தசிங்ஹ ஆராச்சிகே சொலொமன் சஞ்ஜீ பெர்ணாண்டோ என்று அழைக்கப்படும் வெத்தசிங்ஹ ஆரச்சிகே சொலொமன் சஞ்ஜீ பெர்ணாண்டோ என்பவரினால் கைவிடப்பட்டுள்ள தனால் அவ் ஈட்டுப்பத்திரத்தின்படி 2017.11.14 ஆந் திகதியில் பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு வருமதியாக உள்ள ஒரு கோடியே நாற்பது இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதினா யிரத்து இருநூற்று எழுபத்து ஏழு ரூபா முப்பத்து மூன்று சதம் (ரூபா 1,40,99,277.33) கடன்தொகை மற்றும் அத்தினத்தில் வருமதியாக உள்ள வட்டி எட்டு இலட்சத்து ஐந்தாயிரத்து அறுநூற்று ஐம்பத்து ஏழு ரூபா பூஜ்ஜியம் ஒரு சதம் (ரூபா 8,05,657.01), அத்திகதியில் பெறவேண்டிய கட்டணங்கள் ஏழாயிரத்து இருபத்து இரண்டு ரூபா எண்பத்து ஐந்து சதம் (ரூபா 7,022.85) மற்றும் 2017.11.14 ஆந் திகதி முதல் ஏலவிற்பனைத் திகதி வரை 725059600966 மற்றும் 725059600965 இலக்கக் கடன்களுக்கு 14 % வருடாந்த வட்டிவீதத்திலும் 725055900017 இலக்கக் கடனுக்கு 14.50% வருடாந்த வட்டி வீதத்திலும் பெறவேண்டிய முழு வட்டி, வரி, விளம்பரச் செலவு உட்பட ஏலவிற்பனை செலவுகளுடன் மேலும் சட்டரீதியாக செலவுகள் ஏதேனும் வங்கிக்கு வருமதியாக இருப்பின் அவற்றையும் சேர்த்து அறவிடுவதற்கு கடனாளிகளினால் 7986 ஆம் இலக்க ஈட்டு முறியின் கீழ் பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு அடமானமாக வைக்கப்பட்டுள்ள கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனங்களை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும். ஆதனத்தின் விபரங்கள் கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளது.".

மேலும் அவ் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனங்களை ஏலவிற்பனை செய்யும் அதிகாரம் கண்டி, டொரிங்டன் வீதி, இலக்கம் 24 எனும் முகவரியில் வசிக்கும் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

### ஈடு வைக்கப்பட்டுள்ள ஆதனத்தின் விபரங்கள்

வடமேல் மாகாணத்தின், புத்தளம் மாவட்டத்தில் மாரவில மற்றும் சிலாபம் காணிப்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள மஹாவெவ பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட நாத்தாண்டிய பிரதேச சபை எல்லைக்குள் பருதெல்பொல இலக்கம் 530/B கிராம அலுவலர் பிரிவில் தல்வில கிராமத்தில் அமைந்துள்ள "குப்பெயாவல" எனும் காணியின் தொலைபேசி : 141960, 141961 மற்றும் 120926 வரைபடங்களில் குறிப்பிடப்பட்டுள்ள 5831, 3911 மற்றும் 120926 காணித்துண்டுகளை, ஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. எம். பெரேரா என்பவரினால் 1954, மே மாதம் 21 ஆந் திகதி அளந்து வரையப்பட்ட 4595 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைய துண்டாக்கப்பட்ட காணி – வடக்கு: லொட்வின் பெரேராவிற்கு உரிமையான காணித்துண்டு ; கிழக்கு : மேற்குறிப்பிடப்பட்டுள்ள 4537 வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 04; தெற்கு : மேற்குறிப்பிடப்பட்டுள்ள 4537 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 09; மேற்கு : வண்டிப்பாதை ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்துள்ள 1 ஏக்கர் (1ஏ.0றூ. 0பே.) விசாலமான காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆர். எப். எச். பெர்ணாந்து என்பவரினால் 2005, மே 05 ஆந் திகதி மீண்டும் அளந்து தயாரிக்கப்பட்ட 4823 ஆம் இலக்க வரைபடத்தின்படி பிரித்து வேறாக்கப்பட்ட கீழே விபரிக்கப்பட்டுள்ள இலக்கம் 05 எனும் காணித்துண்டுக்கு,

வடக்கு : மேற்குறிப்பிடப்பட்ட 4823 ஆம் இலக்கக் வரைபடத்தின்படி வேறாக்கப்பட்ட துண்டு இலக்கம் 3 எனப்படும் 12 அடி அகலமான பாதை; கிழக்கு : மேற்குறிப்பிடப்பட்ட 4823 ஆம் இலக்க வரைபடத்தின்படி வேறாக்கப்பட்ட துண்டு இலக்கம் 4 காணியின் ஒரு பகுதி; தெற்கு : லால் என்பவரின் இடம், ஜேம்ஸ் பீட்டர், ஜீ. எச். பிரான்சிஸ் மற்றும் லதீஸ் லாவுஸ் உரிமை கோரும் காணி; மேற்கு : தொடுவாவயிலிருந்து மாரவில வரையிலான பாதை எனக் குறிப்பிடப்பட்டிருந்தாலும் சரியாக தொடுவாவயிலிருந்து மஹாவெவ வரையிலான வீதி ஆகிய எல்லைகளுக்குள் அமைந்திருக்கும் 37.40 பேர்ச் (00ஏ. 00றூ. 37.40பே.) விஸ்தீரணமுடைய காணியும் அதன் மீது உள்ள கட்டிடம், மரங்கள் பழவகைகள் உட்பட அனைத்தும் அடங்கலாக.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பணிப்பாளர் சபை செயலாளர்.

பிரதேச அபிவிருத்தி வங்கி,
பிரதான அலுவலகம்,
இல. 933, கண்டி வீதி,
வெதமுல்ல,
களனி.

02-77

---

## பிரதேச அபிவிருத்தி வங்கி

2008 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க பிரதேச அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின் 40 ஆம் பிரிவினால் வலுவாக்கப்பட்ட1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கடன்களை அறவிடுதல் விசேட ஏற்பாடுகளின் கீழ் பிரதேச அபிவிருத்தி வங்கியின்பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

வெத்தசிங்ஹ ஆராச்சிகே பிரசன்ன சஞ்ஜன பெர்ணாண்டோ

சேமிப்பு கணக்கு இலக்கம் : 725010800302
கடன் கணக்கு இலக்கம் : 725055900004/725056100004/ 725059600867

2017.11.28 ஆந் திகதி நடைபெற்ற பிரதேச அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் சபையின் 2017/13 ஆம் இலக்க கூட்டத்தில் கீழ்கண்டவாறு விஷேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"பிரதேச அபிவிருத்தி வங்கியின் சார்பில் "விமுக்தி" கட்டுநேரிய எனும் முகவரியைச் சேர்ந்த சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான டபிள்யூ. ஏ. டீ. ஜீ. சரத் ஸ்டேன்லி அவர்களினால் சாட்டுதல் செய்யப்பட்ட 2014.12.26 ஆந் திகதியிடப்பட்ட இலக்கம். 7833 உடைய ஈட்டுமுறியின்படியும் 2014.12.26 ஆந் திகதியிடப்பட்ட இலக்கம் 7835 உடைய ஈட்டுமுறியின்படியும் வங்கிக்கு வருமதியாக உள்ள பணம் செலுத்துதல், இலக்கம் 237/B "அச்சலா டெக்ஸ்", தல்வில வீதி, தொடுவாவ எனும் முகவரியில் வசிக்கும் வெத்தசிங்ஹ ஆராச்சிகே பிரசன்ன சஞ்ஜன பெர்ணாண்டோ என்பரிவனால் கைவிடப்பட்டுள்ளதனால் அவ் ஈட்டுப்பத்திரத்தின்படி 2017.11.21 ஆந் திகதியில் பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு வருமதியாக உள்ள தொண்ணூற்று இரண்டு இலட்சத்து பதினேழாயிரத்து ஐந்நூற்று இருபது ரூபா ஐம்பத்து நான்கு சதம் (ரூபா 92,17,520.54) கடன்தொகை மற்றும் அத்தினத்தில் வருமதியாக உள்ள வட்டி நான்கு இலட்சத்து எண்பத்து நான்காயிரத்து தொளாயிரத்து பதின்மூன்று ரூபா பதினாறு சதம் (ரூபா 4,84,913.16), அத்திகதியில் பெறவேண்டிய கட்டணங்கள் நாற்பத்து ஏழாயிரத்து தொளாயிரத்து ஐம்பத்து மூன்று ரூபா நாற்பத்து ஏழு சதம் (ரூபா 47,953.47) மற்றும் 2017.11.21 ஆந் திகதி முதல் ஏலவிற்பனைத் திகதி வரை 14% வருடாந்த வட்டி வீதத்தில் பெறவேண்டிய முழு வட்டி, வரி, விளம்பரச் செலவு உட்பட ஏலவிற்பனை செலவுகளுடன் மேலும் சட்டரீதியாக செலவுகள் ஏதேனும் வங்கிக்கு வருமதியாக இருப்பின் அவற்றையும் சேர்த்து அறவிடுவதற்கு கடனாளிகளினால் 7833 மற்றும் 7835 ஆம் இலக்க ஈட்டு முறிகளின் கீழ் பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு அடமானமாக வைக்கப்பட்டுள்ள கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனங்களை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டும். ஆதனத்தின் விபரங்கள் கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளது.".

மேலும் அவ் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஆதனங்களை ஏலவிற்பனை செய்யும் அதிகாரம் கண்டி, டொரிங்டன் வீதி, இலக்கம் 24 எனும் முகவரியில் வசிக்கும் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

### அடகு வைக்கப்பட்டுள்ள ஆதனத்தின் விபரங்கள்
### 7833 ஆம் இலக்க ஈட்டுமுறியின் ஆதன அட்டவணை

வடமேல் மாகாணத்தின், புத்தளம் மாவட்டத்தில் மாரவில மற்றும் சிலாபம் காணிப்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள மஹாவெவ பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட

நாத்தாண்டிய பிரதேச சபை எல்லைக்குள் பருதெல்பொல இலக்கம் 530/B கிராம அலுவலர் பிரிவில் தல்வில கிராமத்தில் அமைந்துள்ள "குப்பியாவல" எனும் காணியின் T. P. : 141960, 141961 மற்றும் 120926 ஆம் இலக்க வரைபடங்களில் குறிப்பிடப்பட்டுள்ள 5831, 3911, 5822 ஆம் இலக்க காணித் துண்டுகளில், துண்டு இலக்கம் 02 மற்றும் 03 ஆகியவற்றை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. எம். பெரேரா என்பவரினால் 1954, மே மாதம் 21 ஆந் திகதி அளந்து வரையப்பட்ட 4595 ஆம் இலக்க வரைபடத்திற்கு அமைய துண்டாக்கப்பட்ட காணி - வடக்கு: லொதின் பெரேராவிற்கு உரிமையான இக்காணியின் துண்டு ; கிழக்கு : மேற்குறிப்பிடப்பட்ட 4537 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 04; தெற்கு : மேற்குறிப்பிடப்பட்டுள்ள 4537 ஆம் இலக்க வரைபடத்தில் இலக்கம் 09 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பாதைக்கு விடப்பட்டுள்ள பகுதி ; மேற்கு : வண்டிப்பாதை ஆகிய எல்லைகளுக்குள் அமைந்துள்ள 1 ஏக்கர் (1ஏ.0றூ. 0பே.) விஸ்தீரணமுடைய காணிக்கு மீண்டும் உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் ஏ. எம். பெரேரா என்பவரினால் 1954, மே 21 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 4595 ஆம் இலக்க நில வரைபடத்தின்படி பிரித்து வேறாக்கப்பட்ட காணித்துண்டுக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஆர். எப். எச். பெர்ணாந்து என்பவரினால் 2007, சனவரி 24 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 5209 ஆம் இலக்க வரைபடத்தின்படி வேறாக்கப்பட்ட துண்டு இலக்கம் 1 எனும் காணிக்கு,

வடக்கு : ஒஸ்டின் அப்புஹாமிக்கு உரிமையான காணி; கிழக்கு: மேற்குறிப்பிடப்பட்டுள்ள 5209 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 2 ; தெற்கு : மேற்குறிப்பிடப்பட்டுள்ள 4823 ஆம் இலக்க வரைபடத்தில் இலக்கம் 03 எனக் குறிப்பிடப் பட்டுள்ள 12 அடி அகலத்தில் பாதைக்கு விடப்பட்டுள்ள பகுதி ; மேற்கு : தொடுவாவயிலிருந்து மாரவில வரையிலான பிரதான வீதி ஆகிய எல்லைகளுக்குள் அமைந்துள்ள ஒரு றூட் ஒன்று புள்ளி இரண்டு பேர்ச் (00ஏ. 01றூ. 1.2பே.) விஸ்தீரணமுடைய காணியும் அதன் மீது அமைந்துள்ள கட்டிடங்கள், மரவகைகள் பழவகைகள் உட்பட அனைத்தும் அடங்கலாக.

### 7835 ஆம் இலக்க ஈட்டுமுறியின் ஆதன அட்டவணை

வடமேல் மாகாணத்தின், புத்தளம் மாவட்டத்தில் மாரவில காணிப்பதிவு பிரிவில் தெற்கு பிடகல் கோரளையில் யடகல்பத்துவில் மஹாவெவ பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட நாத்தாண்டிய பிரதேச சபை எல்லைக்குள் பருதெல்பொல இலக்கம் 530/B கிராம அலுவலர் பிரிவில் தல்வில கிராமத்தில் அமைந்துள்ள "மோயவத்த" எனும் காணிக்கு நில அளவையாளர் நாயகத்தினால் அளந்து தயாரிக்கப்பட்ட அவர் வசம் இருக்கும் பி. பி. பு. 242 ஆம் இலக்க வரைபடத்தின்படி பிரித்து வேறாக்கப்பட்ட துண்டு இலக்கம் 11 எனும் காணிக்கு எல்லைகளாவன : வடக்கு: மேற்குறிப்பிடப்பட்டுள்ள பி. பி. பு. 242 வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 10 ; கிழக்கு : பி. பி. பு. 242 வரைபடத்தில் இலக்கம் 12 காணித்துண்டு எனக்காட்டப்படும் பாதை; தெற்கு : வியானி பெர்ணாண்டோவுக்கு உரிமையான காணி ; மேற்கு : கடலோர சரணாலயம் ஆகிய எல்லைகளுக்குள் அமைந்துள்ள பதினொன்று புள்ளி பூஜ்ஜியம் (0ஏ.0றூ.11.04பே.) விஸ்தீரணமுடைய காணிக்கு உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆர். எப். எச். பெர்னாந்து என்பவரினால் 2014, மே 27 ஆந் திகதி மீண்டும் அளந்து தயாரிக்கப்பட்ட 6634 ஆம் இலக்க நில வரைபடத்தின்படி பிரித்து வேறாக்கப்பட்ட கீழே அட்டவணையில் இரண்டாம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு –

வடக்கு : மேற்குறிப்பிடப்பட்டுள்ள பி. பி. பு. 242 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 10 ; கிழக்கு : தொடுவாவ யிலிருந்து தல்வில வரையிலான வீதி ; தெற்கு : வியானி பெர்ணாண்டோவுக்கு உரிமையான காணி ; மேற்கு : கடலோர சரணாலயம்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பணிப்பாளர் சபை செயலாளர்.

பிரதேச அபிவிருத்தி வங்கி,
பிரதான அலுவலகம்,
இல. 933, கண்டி வீதி,
வெதமுல்ல,
களனி.

02-78

---

## தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ

திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

2017, ஒற்றோபர் 31 ஆந் தேதியன்று நடைபெற்ற தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இன் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் சிறப்பாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டது:

"(கடன்பெறுநரான) கல்முனையைச் சேர்ந்த செல்வராஜா கணேஷானந்தம் என்பவர், தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ சார்பில் (வங்கி) நிறைவேற்றப்பட்ட கல்முனையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஏ. எம். ரகீப் என்பவரினால்

அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014.04.22 ஆந் தேதிய 1352 ஆம் இலக்க முறிமூலம், மட்டக்களப்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு வீ. கனகரெட்ணம் என்பவரினால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2016.11.11 ஆந் தேதிய 10256 ஆம் இலக்க முறிமூலமும் ஈடுவைக்கப்பட்டு அடைமானம் வைக்கப்பட்ட வையும் இதற்கான I ஆம் அட்டவணையிலும் II ஆம் அட்ட வணையிலும் மேலும் விபரமாக விவரிக்கப் பட்டவையுமான ஆதனங்களினதும் வளவுகளினதும் பிணைப்பொறுப்புக் கெதிராக வழங்கப்பட்ட கடன்களின்மீது/வசதிகளின்மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணைதவறியுள்ளாராதலாலும்.

அத்துடன் கடன்பெறுநர், கீழே I ஆம் அட்டவணையிலும் II ஆம் அட்டவணையிலும் விவரிக்கப்பட்ட ஆதனத்தங்களினதும் வளவுகளினதும் இறையிலிச் சொந்தக்காரராகவுள்ளதனால் சொல்லப்பட்ட முறிகளின்கீழ் அவரின் இறையிலி உரிமை உரித்து மற்றும் அக்கறையை வங்கிக்கு ஈடுவைத்துள்ளாரா தலாலும்,

அத்துடன் 2017 ஒகத்து 31 ஆந் தேதியன்றுள்ளவாறாக ஐம்பத்து ஐந்து இலட்சத்துத் தொண்ணூறாயிரத்து அறுநூற்றித் தொண்ணூறு ரூபா இருபத்தேழு சதம் (ரூ. 55,90,690.27) கொண்ட தொகை சொல்லப்பட்ட முறிகள்மீது வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியதாகவும் வந்துள்ளதாதலாலும்.

வங்கியின் பணிப்பாளர் சபையானது, திருத்தப்பட்ட வாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் (முதன்மைச் சட்டம்) தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் செயற்பட்டு, சொல்லப்பட்ட ஐம்பத்து ஐந்து இலட்சத்துத் தொண்ணூறாயிரத்து அறுநூற்றித்தொண்ணூறு ரூபா இருபத்தேழு சதம் (ரூ. 55,90,690.27) கொண்ட தொகையையும், அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படா தெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தையும்,

(i) சொல்லப்பட்ட 1352 ஆம் இலக்க முறியினால் பிணைப் பொறுப்பளிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட 1352 ஆம் இலக்க முறியின் விடயத்தில் வருமதியாவுள்ளதுமான முப்பத்திரண்டு இலட்சத்துத் தொண்ணூற்றொன்பதாயிரத்து அறுநூற்றி யெண்பது ரூபா முப்பத்திமூன்று சதம் (ரூ. 3,299,680.33) கொண்ட தொகைமீதும்;

(ii) சொல்லப்பட்ட 10256 ஆம் இலக்க முறியினால் பிணைப்பொறுப்பளிக்கப்பட்டதும் சொல்லப்பட்ட 10256 ஆம் இலக்க முறியின் விடயத்தில் வருமதியாகவுள்ளதுமான பதினெட்டு இலட்சத்து ஐம்பத்தாறாயிரத்து எழுபது ரூபா பத்தொன்பது சதம் (ரூபா 18,56,070.19) கொண்ட தொகைமீதும் முறையே 2017, செத்தெம்பர் 01 ஆந் தேதியிலிருந்து விற்பனைத் தேதிவரை ஆண்டொன்றுக்கு இருபத்தெட்டுச் சதவீத (28%) வட்டியையும் அதன்பின்னர் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து, முதன்மைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி அடையப்பட்ட விளம்பரச் செலவுகள், விற்பனைச் செலவுகள், மற்றும் ஏனைய இறுப்பனவுகள் என்பவற்றுடன் சேர்த்து அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 1352 ஆம் இலக்க மற்றும் 10256 ஆம் இலக்க முறிகளினால் சொல்லப்பட்ட கடன்களுக்கான/வசதிகளுக்கான பிணைப்பொறுப்பாக வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே I ஆம் அட்டவணையிலும் II ஆம் அட்டவணையிலும் விபரிக்கப்பட்ட ஆதனங்களும் வளவுகளுக்குமான இறையிலி மற்றும் வேறு உரிமை, உரித்து அத்துடன் அக்கறை உத்தரவுபெற்ற ஏலதாரரான திரு. ஐ. டபிள்யு. ஜயசூரிய அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்படவேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது;"

**மேலே குறிப்பீடுசெய்யப்பட்ட அட்டவணை**

**அட்டவணை I**

பிரசித்த நொத்தாரிசு எம். எம். நக்ஷாபி என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2012.08.05 ஆந்தேதிய 1191 ஆம் இலக்க உறுதியின்படி கீழே குறிப்பிடப்பட்ட காணி பின்வருமாறு விவரிக்கப்படுகின்றது:

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டத்தில், கரைவாஹு பத்துவில் கல்முனை -03 இல் அமைந்துள்ளதும் "மாவலடி வளவு" என அழைக்கப்படும் காணியின் கிழக்குப்புற அரைவாசிப் பங்கிலிருந்து வடக்குப் புறப் பாகத்தினதும் தெற்குப் புறப் பாகத்தினதும் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமானவோர் ஒன்றுசேரக்கை ; அதன் எல்லைகள் பின்வருமாறு : வடக்கில் : கறுவல் தம்பி கணபதிப்பிள்ளையின் காணி; கிழக்கில் : மீராமொஹிதீன் ஹாஜியார் மொஹமட் அப்துல் காதரின் காணி ; தெற்கில் : மரியார் வீதி மற்றும் ; மேற்கில் : எஞ்சியுள்ள பாகம்; பரப்பளவில் இது. வடக்கிலிருந்து தெற்கு வரை பதினாறு பாகங்கள் (16) மற்றும் கிழக்கிலிருந்து மேற்கு வரை பதினொரு பாகங்கள் (11). அத்துடன் பின்வருமாறு விவரிக்கப்பட்ட உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எஸ். நேசராஜா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2014.03.02 ஆந்தேதிய SNR/2014/1896 ஆம் இலக்க நில அளவை வரைபடத்தின் அண்மைய எண்ணின்படி அதன்கண் அடங்கியுள்ள எல்லாவற்றுடனும் சேர்த்து இதன் முழுமையும்.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் கல்முனைப் பிரதேச செயலக இடப்பரப்பில் கல்முனை மாநகரசபை எல்லைகளினுள் 3 ஆம் இலக்கப் பிரவில் கல்முனையில் மரியார் வீதியில் அமைந்துள்ளதும் 47/A ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்டதும் "நாவலடி வளவு" என அழைக்கப்படுவதுமானவொரு காணித்துண்டு ; அதன் எல்லைகள் பின்வருமாறு : வடக்கில் : கே. கணபதிப்பிள்ளையின் தோட்டம்; கிழக்கில் : எம். எச். எம். அப்துல் காதரின் தோட்டம்; தெற்கில் : மரியார் வீதி மற்றும் மேற்கில் : எஸ். சித்ராதேவியின் தோட்டம்; பரப்பளவில் இது, இருபத்திரெண்டு தசம் நான்கு மூன்று பேர்ச்சுகளை (0ஏ.0றூ.22.43பே.) கொண்டுள்ளது. அதன்கண் அடங்கியுள்ள எல்லாவற்றுடனும் சேர்த்து இதன் முழுமையும். சொல்லப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் கல்முனைக் காணிப்பதிவகத்தில் D 110/ 2014, K 145/ 03, K232/178, K232/179 மற்றும் K 247/ 41 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

**அட்டவணை II**

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டத்தில், கரைவாஹு பத்துவில், கல்முனைக் கிராமத்தில் அமைந்துள்ளதும், உரிமம் பெற்ற நில அளவையாளர் சீ. பத்மநாதன் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1995.09.05 ஆந் தேதிய 322/A/95 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் இல. 6642, PP6291/9, T. P. இல. 412524 எனக் குறித்துக்காட்டுப்பட்டதும், “மணற்சேனை வளவு” என அழைக்கப்படுவதுமானவொரு காணித்துண்டின் மேற்குப்புற பாகம்; அதன் எல்லைகள் பின்வருமாறு : வடக்கில் : மணற்சேனை வீதி ; கிழக்கில் : வழங்குநரின் எஞ்சியுள்ள பாகம் மற்றும் ; தெற்கிலும் மேற்கிலும் : தியோபிலஸ் அவுட்ஸ்கோனின் காணி; பரப்பளவில் இது, வடக்கிலிருந்து தெற்கு வரை 97 அடி மற்றும் கிழக்கிலிருந்து மேற்கு வரை 40 அடி 7 அங்குலம். இதுவும் அதன்கண் அடங்கியுள்ள எல்லா உரிமைகளும். கல்முனைக் காணிப்பதிவகத்தில் K 141/ 224 மற்றும் K 249/ 171 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேலேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணி, உரிமம்பெற்ற நிலஅளயையாளர் எஸ். நேசராஜா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2016.02.29 ஆந் தேதிய SNR/ 2016/ 2888 ஆம் இலக்க வரைபடத்தில் பின்வருமாறு குறித்துக்காட்டப்படுகின்றது.

கிழக்கு மாகாணம், அம்பாறை மாவட்டத்தில், கரைவாஹுபத்து பிரதேச செயலகத்தில் கல்முனை மாநகர சபை எல்லைகளினுள், கல்முனை-1 கி. அ. பிரிவில், கல்முனைக் கிராமத்தில், மணற்சேனை வீதியில் அமைந்துள்ளதும், உரிமம்பெற்ற நிலஅளவையாளர் எஸ். நேசராஜா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2016.02.29 ஆந் தேதிய SNR/ 2016/ 2888 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும், “மணற்சேனை வளவு” (காணித்துண்டம் LPP 6294 இன் பாகம்) என அழைக்கப் படுவதுமானவொரு காணித்துண்டு ; அதன் எல்லைகள் பின்வருமாறு : வடக்கில் : மணற்சேனை வீதி ; கிழக்கில் : ஈ. செல்வராஜா மற்றும் மனைவியினால் உரிமைகோரப்பட்ட காணி; தெற்கில் நியூட்டன் அவுட்ஸ்கோனினால் உரிமைகோரப்பட்ட காணி மற்றும் ; மேற்கில் பெனடிக்ட் தியோபிலஸ் அவுட்ஸ்கோனினால் உரிமைகோரப்பட்ட காணி; இது, 0.0366 ஹெக்டேயர்களை அல்லது பதினான்கு தசம் நான்கு ஆறு பேர்ச்சுகளை விஸ்தீரணம் (0ஏ.0றூ.14.46பே.) கொண்டுள்ளது. இதுவும் அதன்கண் அடங்கியுள்ள கட்டிடத்துடனும் எல்லா உரிமை களுடனும் சேர்த்து.

சாதனத்துடன் மின்சார வழங்கல் முறைமை, நீர்வழங்கல் முறைமைச் சாதனம், தொலைத்தொடர்புச் சாதனம் மற்றும் காற்றுப்பதனிடுதற் சாதனம் உட்பட மேலே மேலும் விபரமாகக் குறிப்பீடுசெய்யப்பட்ட சொல்லப்பட்ட காணித்துண்டுடன் இப்போது இணைக்கப்பட்டுள்ள அல்லது பொருத்தப்பட்டுள்ள அல்லது இதன்பின்னர் காலத்துக்குக்காலம் இணைக்கப்படக்கூடிய அல்லது நிரந்தரமாகப் பொருத்தப்படக்கூடிய அசைவற்ற பொறித்தொகுதி மற்றும் எந்திரத்தொகுதி, சாதனம், பொருத்திகள், இணைப்புகள் மற்றும் சேவைகள் எல்லாவற்றுடனும் மற்றும் அவை தனித்தனியாகவும்.

சபையின் கட்டளைப்படி,

சபையின் செயலாளர்,
தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ.

02-168

---

## ஹபீப் வங்கி லிமிட்டெட்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் ஹபீப் வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

2017, ஒகத்து 11 ஆந் திகதியன்று ஹபீப் வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையினால் நடாத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு தீர்மானிக்கப்பட்டது:

“ஈடுவைப்பவராகப் பதிவிலக்கம் PV3219 இன்கீழ் இலங்கையின் 2017 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், சொல்லப் பட்ட இலங்கைக் குடியரசில் கண்டி, கொழும்பு வீதி, 233 ஆம் இலக்கத்தில் அதன் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டதுமான டபிள்யு. டீ. ஆர். சமரகோன் அன்ட் சன்ஸ் (பிறைவேட்) லிமிடெட், ஹபீப் வங்கி லிமிடெட் சார்பில் இலங்கை, கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு பீ. எச். கே. எச். திலகரத்ன என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014.07.30 ஆந் திகதிய ஈட்டுச் சட்டத்தின் 47அ என்னும் பிரிவின்கீழான 221 ஆம் இலக்க வெளிப்படுத்துகையுடன் சேர்த்து கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு பீ. எச். கே. எச். திலகரத்ன என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2014.07.30 ஆந் திகதிய 220 ஆம் இலக்க ஈட்டுமுறிமீது வருமதியான கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணை தவறி யுள்ளதாதலாலும், 2017, ஏப்பிரல் 24 ஆந் திகதியன்றுள்ளவாறு இலங்கை ரூபாக்களில் ஒன்பது கோடி முப்பத்தைந்து இலட்சத்து எண்பதாயிரத்து நானூற்றியெழுபது ரூபா நாற்பத்தொரு சதம் (9,35,80,470.41) கொண்ட தொகை, மேற்கூறப்பட்ட ஈட்டுமுறிமீது பிணைப்பொறுப்பளிக்கப்பட்டு சேர்மதியான மேலதிகப்பற்றொன்றின்மீது ஹபீப் வங்கி லிமிட்டெட்டுக்கு இப்போது வருமதியாகவும் சேர்மதியாகவும் உள்ளதாதலாலும்; அத்துடன் ஹபீப் வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபை, இலங்கையின் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவத்தின்கீழ், இதற்கான அட்டவணையில் மேலும் விபரமாக வெளிப்படுத்துகையுடன் சேர்த்து சொல்லப்பட்ட

*220 ஆம் இலக்க ஈட்டு முறிமூலம் ஹபீப் வங்கி லிமிடெட்டுக்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும், 2017, ஏப்பிறல் 24 ஆந் திகதியன்றுள்ளவாறு வருமதியான இலங்கை ரூபாவில் ஒன்பது கோடி முப்பத்தைந்து இலட்சத்து எண்பதாயிரத்து நானூற்றியெழுபது ரூபா நாற்பத்தொரு சதம் (9,35,80,470.41) கொண்ட சொல்லப்பட்ட தொகையையும் 2017, ஏப்பிறல் 25 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரையிலான ஏதேனும் விஞ்சுதலான மீளப்பெறுதலின்மீது 1 மாத சஎபிகவீ (AWPLR)+ ஆண்டொன்றுக்கு 1% மற்றும் ஆண்டொன்றுக்கு 2% என்ற வீதத்திலான மேலதிக வட்டியையும், பின்னர் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து, ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விற்பனையை விளம்பரப்படுத்துதல் மற்றும் அதனை விற்பனை செய்தல் என்பவற்றுக்கான செலவுகளையும் அறவிடுவதற்காக, இலங்கை, கொழும்பு 12, புதுக்கடை வீதி, 156-1/13 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பீட்டாளர் மற்றும் உரிமமளிக்கப்பட்ட ஏலவிற்பனை யாளரான பியரத்ன முத்துகுமாரண என்பவரினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."*

**அட்டவணை**

**விடயம் 1**

*1. குண்டசாலைப் பிரதேச செயலாளர் பிரிவின் கெங்கல்ல கிராம அலுவலர் பிரதேசத்தினுள் மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில் பாத்த தும்புரவின் உடகம்பஹாக் கோறளையில் கெங்கல்லவில் அமைந்துள்ளதும், கண்டி, கெங்கல்ல, தீகன வீதியில், 700 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்ட கொலொங்கஹாவத்த எனவழைக்கப்படுவதும் அறியப்படுவது மான காணியின் பாகமாகவுள்ளதும், உரிமம்பெற்ற நிலஅளவையாளர் பேர்னாட் பீ. ரூபசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 21/2007 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1 எனக் குறித்துக்காட்டப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; காணித்துண்டம் 1 எனவடையாளமிடப்பட்ட காணித்துண்டு பின்வரும் எல்லைகளையுடையது : வடக்கில் : கண்டியிலிருந்து மஹியங்கனைக்குச் செல்லும் பெருவீதி மற்றும் உரிமம் பெற்ற நில அளவையாளர் யூ. ஆர். ரத்நாயக்க என்பவரின் 1126 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1 A எனக் குறித்துக்காட்டப்பட்ட அதே காணியின் பாகம் ; கிழக்கில் : உரிமம்பெற்ற நில அளவையாளர் யூ. ஆர். ரத்நாயக்க என்பவரின் 1126 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1 A எனக் குறித்துக்காட்டப்பட்ட அதே காணியின் பாகம் மற்றும் உரிமம் பெற்ற நில அளவையாளர் யூ. ஆர். ரத்நாயக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1984, யூன் 10 ஆந் திகதிய 1127 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் B ; தெற்கில் : எல மற்றும் ; மேற்கில் : உரிமம்பெற்ற நில அளவையாளர் யூ. ஆர். ரத்நாயக்க என்பவரின் 1127 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1 A என அடையாளமிடப்பட்ட அதே காணியின் பாகம்; பரபப்ளவில் இது, அதன்மீதுள்ள வேறெல்லாவற்றுடனும் ஓர் ஏக்கர் இரண்டு றூட் ஆறு தசம் எட்டு பூச்சியம் பேர்ச்சுக்களை (1ஏ.2றூ.6.80பே.) கொண்டுள்ளதுடன், கண்டிக் காணிப் பதிவகத்தில் தொகுதி பக்கம் D 52/52 இல் பதிவுசெய்யப் பட்டுள்ளது.*

*2. குண்டசாலைப் பிரதேச செயலாளர் பிரிவின் அஸ்வல பிட்டிய கிராம அலுவலர் பிரதேசத்தினுள் மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்தில் பாத்த தும்புரவின் உடகம்பஹாக் கோறளையில் கெங்கல்லவில் அமைந்துள்ளதும், கண்டி, கெங்கல்ல, அஸ்வலபிட்டியவில் 702 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்ட கொலொங்கஹாவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் (உரிமம்பெற்ற நிலஅளவையாளர் கே. எம். எம். வெலிவிட்ட என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1979, மாச்சு 10 ஆந் திகதிய 1052 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1 இன் உட்பிரிவிடுகையாகவுள்ளதும்), உரிமம்பெற்ற நிலஅளவையாளர் யூ. ஆர். ரத்நாயக்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1984, யூன் 10 ஆந் திகதிய 1127 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1 B எனக் குறித்துக்காட்டப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப் பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும்; காணித்துண்டம் 1 B என அடையாளமிடப்பட்ட சொல்லப்பட்ட காணித்துண்டு பின்வரும் எல்லைகளையுடையது : வடகிழக்கில் : 1126 ஆம் இலக்க வரைபடத்தில் கொலங்கஹாவத்த காணித்துண்டம் 1A ; தெற்கில் : நெல்வயல் ; மேற்கில் : மேற்கூறப்பட்ட 1127 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1A இன் எஞ்சியுள்ள பாகம் மற்றும் ; வடக்கில் : மேற்கூறப்பட்ட 1127 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 1A என அடையாளமிடப்பட்ட அதே காணியின் எஞ்சியுள்ள பாகம் ; பரப்பளவில் இது, அதன்மீதுள்ள வேறெல்லாவற்றுடனும் இருபத்தெட்டுத் தசம் ஐந்து பேர்ச்சுக்களை (0ஏ.0றூ.28.5பே.) கொண்டுள்ளதுடன், கண்டிக் காணிப் பதிவகத்தில் தொகுதி பக்கம் D 31/75 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.*

**விடயம் 2**

*சொல்லப்பட்ட ஈடுவைக்கப்பட்ட ஆதனத்துடன் சேர்த்து, டபிள்யூ. டீ. ஆர். சமரகோன் அன்ட் சன்ஸ் (பிறைவேட்) லிமிடெட்டுக்குச் சொந்தமான வேறேதேனும் ஆதனம்.*

*சபையின் கட்டளைப்படி,*

நௌஷீன் அஹமட்,
கம்பனிச் செயலாளர்,
ஹபீப் வங்கி லிமிடெட்.

*2 - 181*

**பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க.**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் வங்கி பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(வென்னப்புவை கிளை)
*வாடிக்கையாளர்கள் பெயர்: வர்ணகுலசூரிய மஹமுகே தினுஷா தில்ருக் பெர்ணாண்டோ*

*27.09.2017 ஆந் திகதியன்று நடைபெற்ற பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க. இன் பணிப்பாளர்கள் சபை கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப் பட்டது:-*

*"கடப்பாடுடையவரான/ஈடுவைத்தவரான வர்ணகுலசூரிய மஹமுகே தினுஷா தில்ருக் பெர்ணான்டோ, பதிவு இல. பீகியூ 48 ஐக் கொண்ட பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க. இன் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு டி. டி. ஜே. எஸ் மாயாதுன்னே அவர்களால் அத்தாட்சிப்படுத் தப்பட்டு 16 நவெம்பர், 2016 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 1212 இன் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணைதவறியுள்ளாராதலாலும்;*

*பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க. (இதனகத்துப்பின்னர் சிலவேளைகளில் ''வங்கி'' என அழைக்கப்படும்) இற்கு சொல்லப்பட்ட ஈட்டு முறி இலக்கம் 1212 இன் மூலம் 11.09.2017 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவு திகதிவரை அறுபத்தொரு இலட்சத்து நான்கு ஆயிரத்து அறுநூற்று நாற்பத்தொன்பது ரூபா எண்பத்திரண்டு சதம் (ரூபா 61,04,649.82) கொண்ட தொகைமீது ஆண்டிற்கு பதினேழு சதவீத (17%) வட்டியுடன் சேர்த்து பணமுதல் கணக்கின்மீது அறுபத்து மூன்று இலட்சத்து நாற்பத்தெண் ணாயிரத்து தொண்ணூற்றேழு ரூபா பதின்மூன்று சதம் (ரூபா 63,48,097.13) கொண்ட தொகை மற்றும் 10 செத்தெம்பர், 2017 ஆந் திகதி வரையான வட்டியும் தற்போது வரவேண்டியும் உரியதாகவுமுள்ளதாதலாலும்;*

*சொல்லப்பட்ட தொகை அறுபத்து மூன்று இலட்சத்து நாற்பத்தெண்ணாயிரத்து தொண்ணூற்றேழு ரூபா பதின்மூன்று சதம் (ரூபா 63,48,097.13) ஐ, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின்கீழ் அறவிடவேண்டிய பணங்கள் மற்றும் செலவுகள் மற்றும் மேற்கூறப்பட்ட திகதிகளிலிருந்து விற்பனை திகதி வரையான வட்டியுடனும் சேர்த்து அறவிடுதற்காக, இத்துடனுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனங்களை பகிரங்க ஏலம் மூலம் விறபனை செய்ய, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம், கண்டி, மாவில்மடை, துட்டுகெமுனு மாவத்தை, இல. 369/1 ஐச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் ஐ. டபிள்யூ. ஜயசூரிய அவர்களுக்கு அதிகாரமும் தத்துவமும் அளிக்கிறதென இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."*

***அட்டவணை***

*1. வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம் (மாறவிலை பதிவுப் பிரிவிற்குள்), பிட்டிகல் கோறளை தெற்கு, கம்மல் பற்று, வென்னப்புவை பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு, உல் ஹிட்டியாவை தெற்கு கிராம அலுவலர் பிரிவு, உல்ஹிட்டியாவையில் அமைந்துள்ளதும் ''அம்பகஹ வத்தை, எத்தெமட்டகஹவத்தை மற்றும் கொஸ்கஹவத்தை'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யு. லக்ஷ்மன் எச். பெர்ணான்டோ அவர்களால் தயாரிக்கப்பட்டு 15.02.2000 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 3121 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1 என அடையாள மிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து சொல்லப்பட்ட துண்டு 1 இன் எல்லைகளாவன- வடக்கு: எம். தொன் அலெக்சாண்டர் பெரேராவின் காணி ; கிழக்கு : நோர்பேர்ட் லோரண்ஸ் பொன்னம்பெருமாவின் காணி ; தெற்கு: உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யு. லக்ஷ்மன் எச். பெர்ணான்டோ அவர்களால் தயாரிக்கப்பட்டு 15.02.2000 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 3121 இல் துண்டு 2 மற்றும் துண்டு 3 ; மேற்கு : கே. லீனஸ் பிலிப்பு பெர்ணான்டோவின் காணி. இது, சொல்லப்பட்ட வரைபடம் இல. 3121 இற்கு அமைய இருபது பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 20.0பே.) விஸ்தீரணமுடையது. மாறவிலை காணி பதிவகத்தில் தொகுதி/ பக்கம ஜீ 183/ 101 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.*

*2. வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம் (மாறவிலை பதிவுப் பிரிவிற்குள்), பிட்டிகல் கோறளை தெற்கு, கம்மல் பற்று, வென்னப்புவை பிரதேச சபை எல்லைகளுக்குள் மேற்கூறப்பட்ட உல்ஹிட்டியாவையில் அமைந்துள்ளதும் ''அம்பகஹவத்தை, எத்தெமட்டகஹவத்தை மற்றும் கொஸ்கஹவத்தை'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வை. எம். இரஞ்சித் யாப்பா அவர்களால் தயாரிக்கப்பட்டு 19.02.2001 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 7657 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து சொல்லப்பட்ட துண்டு 1 இன் எல்லைகளாவன- வடக்கு: உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யு. லக்ஷ்மன் எச். பெர்ணான்டோ அவர்களால் தயாரிக்கப் பட்டு 15.02.2000 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 3121 இல் துண்டு 1 ; கிழக்கு : நோர்பேர்ட் லோரண்ஸ் பொன்னம் பெருமாவின் காணி ; தெற்கு: இதே காணியின் மீதிப் பாகம்; மேற்கு : உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யு. லக்ஷ்மன் எச். பெர்ணான்டோ அவர்களால் தயாரிக்கப்பட்டு 15.02.2000 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 3121 இல் துண்டு 3. இது, சொல்லப்பட்ட வரைபடம் இல. 7657 இற்கு அமைய இரண்டு*

பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 02.0பே.) விஸ்தீரணமுடையது. மாறவிலை காணி பதிவகத்தில் தொகுதி/ பக்கம் ஜீ 183/ 102 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

3. வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம் (மாறவிலை பதிவுப் பிரிவிற்குள்), பிட்டிகல் கோறளை தெற்கு, கம்மல் பற்று, வென்னப்புவை பிரதேச சபை எல்லைகளுக்குள் மேற்கூறப்பட்ட உல்ஹிட்டியாவையில் அமைந்துள்ளதும் ''அம்பகஹவத்தை, எத்தெமட்டகஹவத்தை மற்றும் கொஸ்கஹவத்தை'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வை. எம். இரஞ்சித் யாப்பா அவர்களால் தயாரிக்கப்பட்டு 08.09.2001 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 7737ஏ இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன் கண் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து சொல்லப்பட்ட துண்டு 1 இன் எல்லைகளாவன- வடக்கு: இதே காணியின் பாகம் ; கிழக்கு : நோர்பேர்ட் லோரண்ஸ் பொன்னம்பெருமாவின் காணி ; தெற்கு: உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யு. லக்ஷ்மன் எச். பெர்ணான்டோ அவர்களால் தயாரிக்கப்பட்டு 15.02.2000 திகதியிடப்பட்ட வரைபடம் இல. 3121 இல் துண்டு 2 இன் எஞ்சிய பாகம்; மேற்கு : 10 அடி அகல வீதி (உத்தரவுப்பெற்ற நில அளவையாளர் டபிள்யு. லக்ஷ்மன் எச். பெர்னான்டோ அவர்களால் தயாரிக்கப்பட்டு 15.02.2000 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 3121 இல் துண்டு 3). இது, சொல்லப்பட்ட வரைபடம் இல. 7737ஏ இற்கு அமைய ஆறு தசம் ஐந்து பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 6.5பே.) விஸ்தீரணமுடையது. மாறவிலை காணி பதிவகத்தில் தொகுதி/ பக்கம் ஜீ 183/103 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

4. வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம் (மாறவிலை பதிவுப் பிரிவிற்குள்), பிட்டிகல் கோறளை தெற்கு, கம்மல் பற்று, வென்னப்புவை பிரதேச சபை எல்லைகளுக்குள் மேற்கூறப்பட்ட உல்ஹிட்டியாவையில் அமைந்துள்ளதும் ''அம்பகஹவத்தை, எத்தெமட்டகஹவத்தை மற்றும் கொஸ்கஹவத்தை'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வை. எம். இரஞ்சித் யாப்பா அவர்களால் தயாரிக்கப்பட்டு 03.09.2003 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 8822 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 1 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன் கண் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து சொல்லப்பட்ட துண்டு 1 இன் எல்லைகளாவன- வடக்கு: உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யு. லக்ஷ்மன் எச். பெர்ணான்டோ அவர்களால் தயாரிக்கப் பட்டு 15.02.2000 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 3121 இல் துண்டு 1 ; கிழக்கு : நோர்பேர்ட் லோரண்ஸ் பொன்னம் பெருமாவின் காணி ; தெற்கு: வரைபடம் இல. 8822 இல் துண்டு 2 ; மேற்கு 10 அடி அகல வீதி (உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யு. லக்ஷ்மன் எச். பெர்ணான்டோ அவர்களால் தயாரிக்கப்பட்டு 15.02.2000 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 3121 இல் துண்டு 3). இது, சொல்லப்பட்ட வரைபடம் இல. 8822 இற்கு அமைய பத்து பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 10பே.) விஸ்தீரணமுடையது. மாறவிலை காணி பதிவகத்தில் தொகுதி/பக்கம் ஜீ 183/104 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

குடவத்தை வீதிக்கு இட்டுச் செல்லும் சொல்லப்பட்ட வரைபடம் இல. 3121 இல் துண்டு 3 என அடையாளமிடப்பட்டுள்ள 10 அடி அகல வீதி ஒதுக்கின் கீழும் வழியேயும் மீதுமான முழுமையானதும் சுதந்திரமானதுமான வழியுரிமை மற்றும் ஏனையோருக்குள்ள ஒத்த உரிமைகளுடன் ஏனைய தொடர்புபட்ட உரிமைகளுடன் சேர்த்து.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

தேவிகா ஹல்வத்துர,
முகாமையாளர் - அறவீடுகள்.

02 - 182

---

## பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க.

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் வங்கி பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

(வத்தளை கிளை)

வாடிக்கையாளர்கள் பெயர்: மஹதெல்கே கிறிஸ்தோபர் ஹர்ரீஸ் பேர்ட்றொம் டயஸ் என்ற மஹதெல்கே கிறிஸ் தோபர் ஹர்ரீஸ் பேர்ட்ரம் டயஸ்

27.09.2017 ஆந் திகதியன்று நடைபெற்ற பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க. இன் பணிப்பாளர்கள் சபை கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டது:-

''கடப்பாடுடையவரான/ஈடுவைத்தவரான மஹதெல்கே கிறிஸ்தோபர் ஹர்ரீஸ் பேர்ட்றொம் டயஸ் என்ற மஹதெல்கே கிறிஸ்தோபர் ஹரரீஸ் பேர்ட்ரம் டயஸ் (''டயஸ் எஞ்சினியரிங் அன்ட் மெரயின் சேர்விஸ்'' என்னும் பெயர் வடிவிலான நிறுவனத்தின்கீழ் ஏக உரிமையாளராக வியாபாரத்தைக் கொண்டு நடாத்தும்), பதிவு இல. பீகியூ 48 ஐக் கொண்ட பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க. இன் சார்பில் பிரசித்த நொத்தாரிசு ரீ. எல். எம். ரீ. விஜேசிங்ஹ அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 23.05.2017 ஆந் திகதியிடப்பட்ட முதன்மை ஈட்டு முறி இல. 103 மற்றும் 09.02.2016 ஆந் திகதியிடப்பட்ட மேலதிக ஈட்டு முறி இல. 477 ஆகிய இரண்டினதும் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணைதவறியுள்ளாராதலாலும்;

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க. (இதனகத்துப்பின்னர் சிலவேளைகளில் ''வங்கி'' என அழைக்கப்படும்) இற்கு மேற்சொல்லப்பட்ட முறி இலக்கங்கள் 103 மற்றும் 477 ஆகியவற்றின் மூலம் 01.09.2017 ஆந் திகதியிலிருந்து முழுக் கொடுப்பனவு திகதிவரை முப்பத்தொரு இலட்சத்து நாற்பத்தொன்பது ஆயிரத்து எண்ணூற்று பதினொரு ரூபா ஏழு சதம் (ரூபா 31,49,811.07) கொண்ட

